CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

# THE KOVAI HERALD

தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 5 | English & Tamil Weekly | 22.06.2025 Sunday | 6 Pages | Price Rs.3/-

8th Anniversary Celebrations – The Kovai Herald



# Can Grief be a Vehicle for Growth?

THE KOVAI HERALD



Q: Sadhguru, you were telling us how one can either come out broken or come out wiser from calamities. Can you elaborate on how sadness can be a means of growth?

Sadhguru: Most people do not know what it means for misery to strike in the form of life. But for certain people, when it really strikes, everything that they valued in their life is taken away, and a deep sadness settles. There are many ways to handle this sadness. Some people just sit in a corner and drive themselves mad, making everyone miserable. There are others, who when they become sad, find a way of doing some useful work. Usually, it is people who have been hurt like this who become great karma yogis in their lives.

Let me give you an example. There was a certain person who was a teacher in a primary school in Maharashtra. He lived in a village just off the Sahayadri Mountains with his wife and two children. Then, some dreadful disease took his wife and children, and he was left totally alone. The man was shattered because his whole life was built around those three people. He was on the verge of madness. He simply did not know what to do, so he just walked off into the Sahayadri Mountains and sat there.

He remembered these mountains as they were when he was a child. They used to be green and full of trees. Now, when he was walking in the mountains, it was barren, hot, and unbearable. He sat there for many days, picking fruits and nuts, eating them and just being there.

After some time, he decided that only because this mountain had become barren, his life had been made barren. Whether it is true or not is not the point. He decided to do something about this. He lived there like a saint, single-handedly picked up seeds wherever they fell from the trees, and without anybody's support, planted about 4 lakh trees and made them grow. He saw them through for 25 years. Today, 4 lakh trees are standing on the Sahayadri Mountains because of this one man. He is a yogi, though nobody taught him any yoga.

### From Sadness to Compassion

One can make any emotion into a creative force in their life. There is no negativity in the existence. We may think something is negative and something else is positive, but a light burns because of negative and positive wires together. Negative is not something to get rid of. It is as important as the positive. If your sadness reminds you that you are incomplete, it is good. Make use of your sadness to grow.

When sadness sets in, if you become more compassionate, more caring, and more loving, you have some sense in you. When you get sad, if you get irritable and angry and think that the whole world is wrong, you are a fool. At that moment, if someone meddles with you, your sadness can very easily become anger. Will you make this sadness into anger or will you make this sadness into love and compassion? It is very easy to become compassionate when you are sad.

Learning to use all your emotions creatively is very important. It is not just happiness that is important. If you have not known sadness, you will not mature. Only if you have known sadness and pain, you can be a mature person. Otherwise you will never understand what is happening with you, nor will you understand what is happening with anyone else around you.

# KMCH Hospital Conducts Free Second Opinion Camp for Cancer Patients

THE KOVAI HERALD



The moment one recognizes the symptoms of cancer, fear is often the first thing that takes hold. Regardless of the type of cancer, we make great efforts to understand why it occurs, what causes it, and how it developed. This effort can manifest in various ways. If a doctor tells you that you have cancer, there's a strong desire among people to verify if that diagnosis is correct. Even if you fully trust the doctor who diagnosed you with cancer, the medical world suggests that it's always good to seek advice from another doctor. A second opinion applies to all diseases. At KMCH, a second opinion is available free of charge. If further tests are needed, they can be done at a concessional rate.

Therefore, a second doctor's opinion is vital to gain a transparent and confirmed understanding of your situation. Please visit our doctors once with your cancer test results and doctors' recommendations. Consultations will be provided free of charge, without any fees. If further tests are required, they can be done at a concessional rate. To book an appointment, you can call 87548-87568.

# IIT Madras Team to Study Traffic Congestion at R.S. Puram Junction in Coimbatore

The bustling commercial hub of R.S. Puram in Coimbatore is once again under focus as the Coimbatore City Municipal Corporation prepares to conduct a detailed traffic study to address ongoing congestion issues at the R.S. Puram junction.

Under the Smart City Scheme, the traffic signal near the R.S. Puram post office was removed and replaced with a roundabout system, featuring a clock tower at its center. This change was completed and opened to the public on February 24, 2021.

Before the change, traffic signals helped regulate vehicular movement at the junction. However, after the introduction of the roundabout, motorists began facing significant difficulties navigating the area, leading to frequent traffic snarls. Within a year of its implementation, local residents and vehicle users began requesting the reinstallation of traffic signals, citing the roundabout as a key reason for congestion.

Despite public demand, no solution was implemented, and the roundabout system continues to be criticized for contributing to traffic bottlenecks — an issue that was widely covered in several prominent newspapers at the time.

Now, in a renewed effort to tackle the problem, the Coimbatore Corporation has sought the expertise of a special team from IIT Madras, one of India's premier engineering institutions. The team is expected to arrive in Coimbatore shortly to conduct a month-long study of the R.S. Puram junction.

The study will cover multiple aspects such as traffic flow, vehicle density, space availability for turning vehicles, and existing infrastructure's capacity to support current traffic volumes. Based on the findings, the team will submit a comprehensive report with recommendations for necessary changes to ease congestion in the area.

This initiative is seen as a crucial step toward improving urban mobility in one of Coimbatore's most important commercial localities.

# C.R.I. Solar Secures Major Multi-State Orders Worth ₹210 Crores for 6,894 Solar Pumping Systems

THE KOVAI HERALD



CRI Solar, a division of CRI Pumps and a frontrunner in renewable energy-driven water solutions, has secured significant orders from Maharashtra Energy Development Agency (MEDA), Haryana Renewable Energy Development Agency (HAREDA) and Punjab Energy Development Agency (PEDA)—for the supply, installation and commissioning of 6,894 solar pumping systems, cumulatively valued at ₹210 crores.

These prestigious orders represent a unified effort to strengthen sustainable irrigation infrastructure across India's agricultural heartlands.

These engagements underscore CRI's growing role in supporting both central and state governments in advancing their renewable energy and agricultural productivity goals.

Project deployment will commence in accordance with the respective agency timelines, with CRI Solar, drawing on its extensive expertise in executing large-scale solar water pumping projects with precision and quality assurance. G. Soundararajan, Chairman of CRI Group expressed happiness on the new systems.

# Fresher's Day for Aeronautical Students at Nehru College of Aeronautics and Applied Sciences



THE KOVAI HERALD

The Fresher's Day for B.Sc. (Aeronautical Science) BBA (Airline and Airport Management) and B. Des. (Interior Design) was held at Nehru College of Aeronautics and Applied Sciences, Kuniamuthur, Coimbatore.

G. Vijayalakshmi, Station Manager (Retired), Air India, Coimbatore International Airport Limited, was the Chief Guest. Adv. Dr. P. Krishnadas, Honorary Trade Commissioner of Mauritius-India, Chairman and Managing Trustee, Nehru Group of Institutions presided over the function. Dr. P. Krishnakumar, CEO & Secretary, Nehru Group of Institutions offered the felicitation. Dr. H. N. Nagaraja, Executive Director (Academics and Administration) delivered a special address. Dr. P. R. Balaji, Dean and Director welcomed the gathering. R. Singaravadivelu, HoD - B.Sc. & BBA department offered a vote of thanks.

# Azim Premji Foundation announces Azim Premji Health Equity Fellowship for PG Doctors

THE KOVAI HERALD

Azim Premji Foundation has announced the 'Azim Premji Health Equity Fellowship' an 18-month immersive learning experience for Post Graduate doctors.

The Fellowship is a collaborative effort of Azim Premji Foundation, and 11 prestigious health institutions located in various parts of the country.

By joining this fellowship, Fellows will gain invaluable field experience working on the frontlines of healthcare delivery, develop a deep understanding of the systemic challenges hindering health equity, collaborate with experienced professionals and the community to implement impactful solutions.

For more information click here: https://azimpremjifoundation.org/what-we-do/health/azim-premji-health-equity-fellowship-for-postgraduate-doctors/

# Coimbatore Metro Phase I Work to Begin on Avinashi Road and Sathy Road Corridors

THE KOVAI HERALD

The first phase of the Coimbatore Metro Rail project is set to commence with construction activities along the Avinashi Road and Sathy Road corridors. The project is being spearheaded by the Chennai Metro Rail Limited (CMRL), with preliminary land survey operations conducted by the Coimbatore City Municipal Corporation.

The Avinashi Road corridor will stretch from Ukkadam Bus Stand to Neelambur, passing through the Coimbatore International Airport, covering a distance of 20.4 km.

The Sathy Road corridor will run from Coimbatore Railway Station to Velliyampalayam Junction, covering 14.4 km.

As part of the groundwork, a detailed land survey was carried out to identify the presence of underground utilities such as electric cables, telecommunication lines, sewer systems, and gas pipelines. Reports indicate that 75% of the land survey across both corridors, including Sathy Road, has now been completed.

The Coimbatore Corporation has submitted the land survey report to CMRL. If approved, the initial phase of land acquisition will begin on Sathy Road, from Textool Bridge to Surya Hospital, at an estimated cost of ₹154 crore.

For the Avinashi Road corridor, sources indicate that land acquisition will primarily occur on the left side of the stretch between Uppilipalayam and Goldwins.

This marks a significant step forward in Coimbatore's long-anticipated metro rail development, aimed at easing traffic congestion and improving urban mobility.

**FOR NEWS Publication**
**9244317182**
**04223147962**

# 500 Trees planted by 500 Students in 50 Seconds under the guidance of Siruthuli



THE KOVAI HERALD

Coimbatore City Round Table 31 (CCRT 31) and Coimbatore City Ladies Circle 16 (CCLC 16), in partnership with Siruthuli, a prominent water conservation NGO, organized a record-setting initiative: 500 Trees Planted by 500 Students in Just 50 Seconds, around the restored Mariamman Temple Check Dam in Kovaipudur.

The event was supported by Stalwart Group of Companies and VLB College of Arts & Science drew participation from civic leaders, students, and environmental champions alike.

The tree-planting event took place in the presence of R. Vetriselvan, Deputy Mayor, Coimbatore City Municipal Corporation; Sujani Balu, Steering Committee Member, Siruthuli; Ragulan Shekar, Area Chairman, Round Table India; D.Kalaivani, Principal, VLB College of Arts & Science ; Tr. Lakshmiganth Krishnan, Chairman, CCRT 31, R.S. Vidhya, Chairperson, CCLC 16; - D.R. Koushik, Area Vice Chairman; Mandhaghini Thulasi, Area Vice Chairperson and Tr. Vishnu Prabhakaran, National Secretary, Round Table India.

Located between Arivozhi Nagar and Kovaipudur, the 1.5-acre Mariamman Temple Check Dam has a storage capacity of 6 million litres. The region has been plagued by severe water scarcity, with borewells running dry even at 1,000 feet depths. Due to neglect, the existing check dams had become ineffective, unable to retain water or recharge groundwater.

Special acknowledgment was given to Jaishree Suryakumar Santhosh, CEO, VLB College of Arts & Science, for mobilizing the students and Mr. Christopher Arvinth, MD, Stalwart Group of Companies, for funding the restoration project to the tune of Rs.13 lakhs.

# FICCI FLO Coimbatore hosts 10-th Edition of FLO Bazaar



THE KOVAI HERALD

The FICCI FLO Coimbatore Chapter, under the leadership of Chairperson Aparna Sunku, hosted its 10th edition of FLO Bazaar, a vibrant and inclusive fashion and lifestyle exhibition showcasing women-led businesses from Coimbatore and neighbouring districts.

The two-day event featured a curated mix of products ranging from sustainable clothing and silver jewellery to home decor, silk sarees, kidswear, wellness items, and more. The inaugural ceremony will be held on Friday, 20th June at 9:00 AM and will be graced by Pavan Kumar Giriyappanavar, District Collector of Coimbatore, as Chief Guest. The lighting of the lamp will be done by Suguna Lakshminarayanaswamy, Past Chairperson, FLO Coimbatore.

The event was Powered by Eyana Diamonds, a brand aligned with the spirit of empowering women and celebrating brilliance in all forms.

FLO Bazaar 2025 promises not just a shopping experience, but a purposeful gathering that supports and uplifts women across economic and social spectrums.

# Mahaveer Finance secures Rs.200Cr funding



Mahaveer Finance India Limited, a leading Chennai-based non-banking financial company (NBFC) specializing in used commercial and passenger vehicle financing, today announced its Rs. 200Cr fund raise, led by Elevation Capital, with participation from existing investors BanyanTree Finance and First Bridge Capital. The fundraise underscores the growing confidence in Mahaveer Finance's robust business model built on the back of multi decadal and business cycle experience, tech adoption and loyal employee base.

This strategic infusion of capital will empower the company to deepen its presence in its strong hold markets in South India, expand its technological infrastructure, and help more customers who are currently underserved - lacking options besides informal moneylenders. Deepak Dugar, CEO and Managing Director of Mahaveer Finance, Praveen Dugar, CFO and DMD of Mahaveer Finance, Mridul Arora, Partner, Elevation Capital MADE

# ஸ்ரீ ராமகிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரியில் இருநாள் தேசிய கருத்தரங்கம்




தி கோவை ஹெரால்டு

அகில இந்திய தொழில்நுட்ப கல்வி மன்றம் உதவியுடன் நடத்தப்பட்ட இருநாள் தேசிய கருத்தரங்கம் "இஞ்சினியரிங்எவல்யூஷன் : ஏஐ & எம்எல் அக்ராஸ் ஹொரைசன்ஸ்" ஸ்ரீ ராமகிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரி, மின் மற்றும் மின்னணு பொறியியல் மற்றும் மின்னணு தொடர்பியல் ஆகிய துறைகளால் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

துவக்க விழா நடைபெற்றது. அதன்பின் மின் மற்றும் மின்னணு பொறியியல் துறையின் இணை பேராசிரியரான டாக்டர் ஜி. கண்ணாயிரம் வரவேற்புரைநிகழ்த்தினார்.

மின்னணுதொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் எஸ்.அனிலா தலைமை விருந்தினர் டாக்டர். கே.டி.சதீஷை அறிமுகம் செய்தார்.

செயற்கைநுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் தொழில்நுட்பங்களின் மாறுபட்ட பயன்பாடுகள் குறித்து விரிவாக பேராசிரியர் டாக்டர் எஸ். சங்கீதா கருத்தரங்கின் நோக்கங்களை எடுத்துரைத்தார்.

மேலும், நாட்டின் பல பகுதிகளில் இருந்து 50-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டிருப்பதை குறிப்பிட்டார்.

தலைமை விருந்தினர் டாக்டர் சதீஷ், நியூட்டனின் பொறியியல் கோட்பாடுகளை, நவீன பொறியியல் வளர்ச்சியுடன் இணைத்து பேசினார். மின்னணு தொடர்பியல் துறையின் உதவிப் பேராசிரியர் ஆர். ராமகிருஷ்ணன் நன்றியுரையுடன் துவக்க விழா நிறைவடைந்தது.

# ஆகஸ்ட் 15 முதல் ரூ.3000-ம் வருடாந்திர சுங்கச்சாவடி பாஸ் அறிமுகம்




தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகளுக்காக மத்திய அரசு புதிய முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சுங்கச்சாவடிகளில் வரிசையில் நிற்கும் சிரமங்களை குறைக்கவும், செலவைக் கட்டுப்படுத்தவும் உதவும் வகையில் வருடாந்திர சுங்கச்சாவடி பாஸ் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இதைப் பற்றி மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி தனது எக்ஸ் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த பாஸ் ரூ.3000 செலவில் கிடைக்கும் மற்றும் ஒரு வருடம் அல்லது 200 பயணங்கள் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவித்துள்ளர். இப்புதிய சலுகை வரும் ஆகஸ்ட் 15ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வரவுள்ளது.

இந்த வருடாந்திர சுங்க பாஸ், வணிக நோக்கமற்ற கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்களுக்கு மட்டுமே பொருந்தும். வாகன ஓட்டிகள், இந்தப் பாஸைப் பெற, விரைவில் வெளியிடப்படும் பிரத்யேக இணையதள லிங்க் மற்றும் 'ராஜ்மார்க் யாத்ரா' செயலியின் வழியாக விண்ணப்பிக்கலாம். மேலும், என்எச்ஏஐ மற்றும் மார்த் இணையதளங்களிலும் இச்சேவை கிடைக்கும்.

சுமார் 60 கி.மீ. வரம்பிற்குள் உள்ள சுங்கச்சாவடிகளுக்கிடையே பயணிக்கும் ஓட்டுநர்களிடையே தொடர்ந்து வந்த புகார்களைப் பொருட்படுத்தி, இந்தப் பாஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது பயணத்தை எளிதாக்கும் ஒரு முன்னேற்றமான முயற்சி என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஃபாஸ்ட்டேக் மூலம் தற்போது சுங்க கட்டணம் வசூலிக்கப்படும்நிலையில், இந்த புதிய ஆண்டு பாஸ் பயணிகளுக்கு நேரமும் பணமும் மிச்சமாகும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# பி.எஸ்.ஜி. பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ விருது வழங்கும் விழா




தி கோவை ஹெரால்டு

பி.எஸ்.ஜி.பாலிடெக்னிக் கல்லூரியின் டிப்ளமோ விருது வழங்கும் விழா பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரிகலையரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் டாக்டர் பி. கிரிராஜ் வரவேற்புரை ஆற்றினார். பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் டாக்டர் கே. பிரகாசன் தலைமை வகித்தார்.

இதில் தலைமை விருந்தினராக கேட்டர்பில்லர் மைனிங் பிரிவு, பெங்களூருவின் மைனிங் இயக்குநர் ஆண்டி தன்ராஜ் கலந்துக்கொண்டு ஆடைக்கலை தொழில்நுட்பம், கார் பொறியியல், கணினி பொறியியல், கணினி நெட்வொர்க்கிங், மின்சார மற்றும் மின்னணு பொறியியல், மின்னணு மற்றும் தொடர்பாடல் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் டிப்ளமோ படிப்பை முடித்த 390 பேருக்கு சான்றிதழ்களை வழங்கி கவுரவித்தார். மேலும், டிப்ளமோ படிப்புகளில் முதலிடம்பிடித்த 15பேருக்கு விருதும்,பதக்கமும்வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

## செயற்கை நுண்ணறிவு இளம் தலைமுறையின் வளர்ச்சிக்கு ஆபத்து

### போப் லியோ XIV எச்சரிக்கை

செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மனித சமூகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய நிலையில், அதன் எதிர்மறையான விளைவுகள் குறித்து புதிய போப் லியோ XIV கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் உடல்நலக்குறைவால் காலமான போப் பிரான்சிஸ்க்கு பிறகு, அமெரிக்காவைச் சேர்ந்த லியோ XIV, புதிய போப்பாக தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் சமீபத்தில் வாடிகனில் நடைபெற்ற "செயற்கை நுண்ணறிவு மற்றும் நெறிமுறைகள்" என்ற தலைப்பிலான மாநாட்டில் கலந்து கொண்டு, ஏஐ பற்றிய தனது கருத்துகளை வெளிப்படுத்தினார்.

போப் லியோ XIV கூறியதாவது, "புதிய தொழில்நுட்பங்கள் மனித குலத்திற்கு என்ன அர்த்தம் கொண்டுள்ளது என்பதை நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். செயற்கை நுண்ணறிவு மனிதர்களின் பன்முகத்தன்மையை மதிக்கிறதா? ஒவ்வொருவரின்கண்ணியத்தையும் பாதுகாக்கிறதா? என்பதையும் ஆராய வேண்டியுள்ளது. அதிலும் இளம் தலைமுறையைப் பற்றி அவர் வெளிப்படுத்திய கவலை, முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

"இன்றைய இளம் தலைமுறை மிக வேகமாக தகவல்களை நாடி செல்கிறது. இது அவர்கள் அறிவு மற்றும் நரம்பியல் வளர்ச்சிக்கு ஆபத்தானது. மேலும், செயற்கை நுண்ணறிவின் தாக்கம், ஆன்மீக வளர்ச்சிக்கும் ஒரு சவாலாக மாறக்கூடும்," என போப் லியோ எச்சரித்தார்.

# ரயில்களில் காத்திருப்பு டிக்கெட்டு 25% வரை மட்டுமே

## இந்திய ரயில்வே புதிய அறிவிப்பு

ரயில்களில் அதிகப்படியான காத்திருப்பு டிக்கெட்டுகள் மூலம் பயணிகள் அனுபவிக்கும் சிக்கல்களை தவிர்க்க, இந்திய ரயில்வே புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. இனிமேல், ஒரு ரயிலில் உள்ள மொத்த இருக்கைகளில் அதிகபட்சம் 25% வரை மட்டுமே காத்திருப்பு டிக்கெட்டுகள் வெளியிடப்படும் என ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த புதிய நடவடிக்கையின் மூலம், பயணிகள் தங்கள் பயணத்திற்கான உறுதி டிக்கெட்டை பெறும் வாய்ப்புகளை அதிகரிக்க முடியும் என்றும், ரயில்களில் ஏற்படும் கூட்ட நெரிசலும் குறையலாம் என்றும் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இந்த விதி ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ, மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும் சூப்பர்ஃபாஸ்ட் ரயில்கள் என அனைத்து முக்கிய வகை ரயில்களுக்கும் பொருந்தும். உதாரணமாக, ஒரு ரயிலில் 1,000 இருக்கைகள் இருந்தால், அதிகபட்சம் 250 காத்திருப்பு டிக்கெட்டுகள் மட்டுமே வெளியிடப்படும்.

ரயில்வே அதிகாரிகளின் தரவின்படி, தற்போது காத்திருப்பு டிக்கெட் வைத்திருப்பவர்களில் சுமார் 20% முதல் 25% வரை பயணிகள் பயணத்திற்கு முன்னதாகவே உறுதிப்படுத்தப்படுகின்றனர். இந்த புதிய முறைமை, இத்தகைய உறுதிப்படுத்தல்களின் தரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏசி முதல் வகுப்பு முதல் சேர் கார் வரை, அனைத்து பிரிவுகளிலும் இந்தக் கண்காணிப்பு நடைமுறை அமல்படுத்தப்படுகிறது. மேலும், மூத்த குடிமக்கள், பெண்கள் மற்றும் பிற ஒதுக்கீடுகளும் கருத்தில் கொண்டு இந்த வரம்பு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த புதிய விதி, பயணிகளை நேரத்தில் திட்டமிட உதவுவதோடு, பிளானிங் செய்வதில் தெளிவையும், பயண அனுபவத்தில் நம்பிக்கையையும் வழங்கும் என ரயில்வேத் துறை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி காலமானார்



உடல் நலக்குறைவு காரணமாக கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி சிகிச்சை பலனின்றி காலமானார். இவர் கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் வால்பாறை தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இவர் கோவை மாநகர அதிமுக எம்ஜிஆர் இளைஞரணி செயலாளராக இருந்தார். மேலும் இவர் அன்னூர் ஊராட்சி கவுன்சிலராகவும் இருந்துள்ளார்.

## பணியாற்றுபவர்களுக்கு பி.இ. படிப்பில் சேர ஜூலை 11 வரை விண்ணப்பிக்கலாம்

தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் 8 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளில், தற்போது பணியாற்றிக் கொண்டே படிக்க விரும்பும் பணியாளர்களுக்காக பி.இ. படிப்புகள் நடப்பாண்டும் நடைமுறைக்கு வருகின்றன.

இந்தச் சிறப்பு கல்வி திட்டத்தில் சிவில், மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல் & எலெக்ட்ரானிக்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன், மற்றும் கணினி அறிவியல் ஆகிய ஐந்து துறைகளில் மூன்றரை ஆண்டுகளுக்கான (7 செமஸ்டர்) பி.இ. படிப்புகள் வழங்கப்படுகின்றன.

இப்படிப்புகளில் சேர விரும்புவோர், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பட்டயப் படிப்பு முடித்திருக்க வேண்டும் என்பது குறிப்பு. மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப் படிவம் மற்றும் முழுமையான தகவல்களை https://www.ptbe-tnea.com/ என்ற இணையதளத்தில் காணலாம்.

விண்ணப்பங்களை 2025 ஜூலை 11ஆம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தகவல்களுக்கு, கோவை தொழில்நுட்பக் கல்லூரி (CIT) ஒருங்கிணைப்பு மையத்தை 0422 - 2590080 அல்லது 94869 77757 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம் என அதிகாரப்பூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்னஞ்சல்கள் வழியாக ஹேக்கர்கள் புதிய மோசடி

இணைய பாதுகாப்பு நிபுணர்கள் முக்கியமான எச்சரிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். தற்போது ஹேக்கர்கள், பயனர்களைஏமாற்றும்புதிய வழியாக 'அன்சப்ஸ்கிரைப்' (செய்திகளை நிறுத் தும்) பட்டனை தவறாக பயன்படுத்திவருகின்றனர். இதன் மூலம், மின்னஞ்சல்களில் விழிப்புணர்வின்றி செயல்படும் பயனர்கள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய அபாயம் உள்ளது.

வழக்கமாக, உண்மையான நிறுவனங்களிடமிருந்து வரும் விளம்பர மின்னஞ்சல்களில் 'அன்சப்ஸ்கிரைப்' பட்டனை கிளிக் செய்தால், பயனரை புதிய பக்கத்திற்கு அழைத்து சென்று, தகவல் பட்டியலில் இருந்து அவரை பாதுகாப்பாக நீக்கும் செயல்முறை நடைமுறையில் உள்ளது.

ஆனால் தற்போது, மாறுவேடம் பூண்ட ஹேக்கர்கள், இதேபோன்ற வடிவமைப்பில் போலி மின்னஞ்சல்களை அனுப்பி, பயனர்களை அந்த அன்சப்ஸ்கிரைப் பட்டனை கிளிக் செய்கின்றனர். அதனை கிளிக் செய்தவுடன், பயனர் தெரியாமலேயே வைரஸ், மால்வேர் போன்ற தீங்கிழைக்கும் மென்பொருட்கள் கணினிக்குள் புகுத்தப்படுகின்றன. இதன் மூலம், பயனரின் தனிப்பட்ட தகவல்களும், கணினி பாதுகாப்பும் பெரும் அபாயத்திற்கு உள்ளாகின்றன.

இந்த வகை அன்சப்ஸ்கிரைப் மோசடிகளில் இருந்து பாதுகாப்பு பெற, சில எளிய பாதுகாப்பு வழிமுறைகளைத் தொழில்நுட்ப நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்:

அடையாளம் தெரியாத அனுப்புநர்கள் அனுப்பும் மின்னஞ்சல்களில் அன்சப்ஸ்கிரைப்பட்டனை கிளிக் செய்யவேண்டாம். "அர்ஜெண்ட்" அல்லது "இறுதி அறிவிப்பு" போன்ற அச்சுறுத்தும் வார்த்தைகள் உள்ள தலைப்புகள் கொண்ட மின்னஞ்சல்களைத் திறக்காமல் தவிர்க்கவும்.

அன்சப்ஸ்கிரைப் பட்டன் மின்னஞ்சலின் மேல்பகுதியில் இல்லாமல், கீழே அல்லது சந்தேகத்திற்கிடமான இடத்தில் இருந்தால், அதனை கிளிக் செய்ய வேண்டாம். எந்தவொரு இணைப்பையும் கிளிக் செய்வதற்கு முன், மின்னஞ்சலின் உள்ளடக்கத்தை முழுமையாக படிக்க நேரம் ஒதுக்க வேண்டும்.

மின்னஞ்சல் மோசடிகள் தற்போதைய இணைய உலகில் பெரிய அச்சுறுத்தலாக உள்ளதால், உங்கள் இன்பாக்ஸில் வரும் ஒவ்வொரு செய்தியையும் கவனமாக பரிசீலித்து செயல்பட வேண்டும்.

இந்த எச்சரிக்கையால், பயனர்கள் இணையத்தில் தங்கள் தனிப்பட்ட தகவல்களை பாதுகாப்பதிலும், வலை மோசடிகளைத் தவிர்ப்பதிலும் மேலும் விழிப்புணர்வுடன் இருக்கலாம்.

## ரேஷன் கடைகளில் இனி ஒருமுறை கைவிரல் ரேகை பதிவு செய்தால் போதும்: தமிழக அரசு புதிய நடைமுறை அறிவிப்பு

ரேஷன் கடைகளில் பொருட்கள் வாங்கும் நேரத்தில் ஏற்படும் காலவிரயத்தை குறைக்கும் வகையில், தமிழக அரசு புதிய தீர்வை அறிவித்துள்ளது. இதன்படி, இனிமேல் முன்னுரிமை ரேஷன் அட்டைகள் மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா அட்டைக்காரர்களுக்கு, ஒருமுறை மட்டும் கைவிரல் ரேகை அல்லது கண் கருவிழி பதிவு செய்தாலே அனைத்து திட்டப் பொருட்களும் வழங்கப்படும்.

இதற்கு முந்தைய நடைமுறையில், மத்திய அரசு திட்டத்தில் கிடைக்கும் அரிசிக்கு ஒரு முறையும், மாநில அரசு திட்டத்தில் கிடைக்கும் பொருட்களுக்கு மேலும் ஒரு முறையுமாக, மொத்தம் இரண்டு முறை கைவிரல் பதிவு தேவைப்பட்டு வந்தது. இதனால் பொருட்கள் விநியோகத்தில் தாமதமும், பொதுமக்கள் இடையே நேர சஞ்சலமும் ஏற்பட்டது.

இந்தப் புதிய மாற்றம் பி.ஓ.எஸ். மெஷின் மென்பொருளில் செய்துள்ள புதுப்பிப்பின் மூலம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் மூலம், பொதுமக்கள் நேரத்தை மிச்சப்படுத்தி, விரைவாக பொருட்களைப் பெற முடியும் என்பது ரேஷன் அட்டையாளர்களிடையே சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை எடுத்துள்ள இந்த மாற்றம், ரேஷன் கடைகளின் செயல் திறனைப் பெரிதும் மேம்படுத்தி, ஒரு நாளில் சுமார் 20 முதல் 25 ரேஷன் அட்டைகளுக்கு கூடுதலாக பொருட்களை வழங்க முடிகிறது என ரேஷன் கடை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நடைமுறை முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும் போது, பொதுமக்களுக்கு சீரான மற்றும் எளிதான சேவை கிடைக்கும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## பி.எட். மற்றும் முதுநிலைப் படிப்புகளுக்கான இணையவழி சேர்க்கை அறிவிப்பு

2025-26 ஆம் கல்வியாண்டிற்கான பி.எட். மற்றும் முதுநிலைப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறை தொடங்கியுள்ளதாக தமிழ்நாடு உயர்கல்வித்துறை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் பி.எட். படிப்புக்கும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கும் இணையவழி விண்ணப்பங்களைத் துவக்குவதற்கான தொடக்க விழாவை, மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பி.எட். சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் 20.06.2025 முதல் 09.07.2025 வரை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம் என தெரிவித்தார். மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் 18.07.2025 அன்று வெளியிடப்படும் என்றும், 21.07.2025 முதல் 25.07.2025 வரை மாணவர்கள் தங்கள் விருப்பமான கல்லூரிகளைத் தேர்வு செய்யலாம் என்றும் கூறினார்.

28.07.2025 அன்று இடஒதுக்கீட்டு ஆணை மாணவர்களுக்கு வழங்கப்படும். மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆணையை www.iwiase.ac.in என்ற இணையதளத்தில் தங்கள் உள்நுழைவு ஐடி மூலமாக பதிவிறக்கம் செய்து, அதில் குறிப்பிடப்பட்ட கல்லூரியில் சேர வேண்டும். பி.எட். வகுப்புகள் ஆகஸ்ட் 6ஆம் தேதி தொடங்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

மற்றொரு முக்கிய அறிவிப்பாக, முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கையும் ஜூன் 20 முதல் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 110 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2025-26 கல்வியாண்டிற்காக மொத்தம் 24,309 இடங்கள் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

முதுநிலை சேர்க்கைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள், www.tngasa.in என்ற இணையதளத்தில் 15.07.2025 வரை விண்ணப்பிக்கலாம். மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் 18.07.2025 அன்று கல்லூரிகளுக்கு அனுப்பப்படும். மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவத்தினர், தேசிய மாணவர் படை மற்றும் பாதுகாப்புப் படைவீரர்களுக்கான சிறப்பு கலந்தாய்வு 25.07.2025 அன்று நடைபெறும்.

பொது கலந்தாய்வு 28.07.2025 முதல் நடைபெறும். முதுநிலை முதலாம் ஆண்டு வகுப்புகள் 04.08.2025 (திங்கள்கிழமை) தொடங்கும்.

## கோவையில் ஸ்ரீஸ்வயம் பிரகாச சச்சிதானந்த சரஸ்வதி மகா சுவாமிகளின் ஜென்ம தின வைபவம்



கர்நாடக மாநிலம் சிருங்கேரி அருகே ஹரிஹரபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஆதிசங்கராச்சார்ய சாரதா லஷ்மி நரசிம்ம பீடாதிபதிஸ்ரீஸ்வயம்பிரகாச சச்சிதானந்த சரஸ்வதி மகா சுவாமிகளின் ஜென்ம தின வைபவம், கோவை ராம்நகரில் உள்ள ஸ்ரீஐயப்ப பூஜா சங்க வளாகத்தில் நடைபெற்றது.

புண்ணிய பூமியான கர்நாடக மாநிலம் சிருங்கேரி அருகேயுள்ள ஹரிஹரபுரத்தில் ஸ்ரீ ஆதிசங்கராச்சார்ய சாரதாலஷ்மிநரசிம்மபீடம் செயல்பட்டு வருகிறது. இந்த தர்ம பீடத்தின் தற்போதைய 25-வது பீடாதிபதி பரமபூஜ்ய ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராச்சார்யா ஸ்ரீஸ்வயம் பிரகாச சச்சிதானந்த சரஸ்வதி மகா சுவாமிகள், ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயிலை பிரம்மாண்டமான முறையில் அமைத்தார்.

ஸ்ரீஆதிசங்கராச்சார்ய சாரதா லஷ்மி நரசிம்ம பீடாதிபதிஸ்ரீஸ்வயம்பிரகாச சச்சிதானந்த சரஸ்வதி மகா சுவாமிகளின் ஜென்ம தின வைபவம் கோவை ராம்நகரில் உள்ள ஸ்ரீஐயப்ப பூஜா சங்க வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சி தொடர்பான கூடுதல் விவரங்களைப் பெற விரும்புவோர் 99440 99989 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஸ்ரீ ஆதிசங்கராச்சார்ய சாரதா லஷ்மி நரசிம்ம பீடத்தின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து



**சூலூர் பிரபஞ்ஜனா**
**அஸ்ட்ரோலஜி**

கனவே கனவே கலையாதே!
காலம் இருக்கு வருந்தாதே!
பூகம்பத்தின் புழுதியிலே பூவாய்
நீயும் பிறந்தாயே!
தாய் மண்ணையும் முத்தமிட்டு
தலை மகனாய்
வந்தவனே!
நாளைய தீர்ப்பில்
எழுச்சிமிகு இளைஞனாய்
எங்களிடம் அறிமுகமானவனே!
தமிழக மக்களின்
நலனுக்காக
கோடிகளையும் துறந்தவனே!
ஏழைகளின் ஏக்கங்களை
தீர்க்கப் போறவனே!
மனிதம் காக்க
புனிதனாய் புறப்பட்டவனே!
தமிழக வெற்றிக்கழக
கட்சியினால் தரணியை
என்றும் ஆள்பவனே!
தமிழ் மகனே,
இளைய தளபதியே
தமிழன் போற்றும்
தலைவா நீ வாழ்க வளர்க!
தமிழக மக்கள் அனைவரின்
மனமார்ந்த இனிய
வெற்றியின் பிறந்தநாள்
வாழ்த்துக்கள்!

## இராணுவத்துடன் இணைந்து விண்வெளியில் உளவுத் துறைக்காக தனி செயற்கைக்கோள் தயாரிக்கும் இஸ்ரோ

விண்வெளி பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்குடன், இந்தியா மற்ற நாடுகளின் உளவு செயற்கைக்கோள்களின் இயக்கங்களை கண்காணிக்கத் தனியான செயற்கைக்கோள் கூட்டமைப்பை உருவாக்கும் திட்டத்தில் இறங்கியுள்ளது. இது முழுமையாக இந்தியாவில் தயாரிக்கப்படும் உளவுத் திட்டமாகவும், படைகள் துறை தலைமையிலான இஸ்ரோ உடன் இணைந்து செயல்படுத்தப் படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த புதிய முயற்சியின் முக்கிய அம்சம் ஸ்பேஸ் டொமைன் அவேர்னெஸ் அல்லது விண்வெளி சீர் திருத்தம் மற்றும் கண்காணிப்பு மேலாண்மை ஆகும். இது நேத்ரா திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படும்.

பெங்களூருவைச் சேர்ந்த டிகாந்த்ரா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ், செயற்கைக் கோள்கள் மறுநிலையில் செயல்பட்டு, பிறநாடுகளின் செயற்கைக்கோள்களின் இயக்கங்கள், படங்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்களை நுட்பமாக கண்காணிக்கவல் லவையாக இருக்கும்.

இந்தியாவின் இம் முயற்சி, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவின் முன்னோடி விண்வெளி பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் ஒத்துவரும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில், ரஷ்யா தனது காஸ்மாஸ் 2543 செயற்கைக்கோளில் இருந்து வெளிவிட்ட புதிய பொருள், விண்வெளி தாக்குதல்களுக்கான ஆயுதமாக கருதப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், ரூ. 27,000 கோடி மதிப்புடைய எஸ்.பி.எஸ்.-3 திட்டத்தின் கீழ், இரண்டாண்டுகளில் 52 உளவு செயற்கைக்கோள்கள் விண்வெளியில் செலுத்தப் படும். இந்த பிரம்மாண்ட திட்டத்தில் அனந்த் டெக்னாலஜிஸ், செண்டம் டெக்னாலஜிஸ், ஆல்ஃபா டிசைன் டெக்னாலஜிஸ் போன்ற முன்னணி இந்திய நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

"போர் பூமியில் மட்டும் நடைபெறாது; விண்வெளியிலும் தொடரும்" என்ற இஸ்ரோ அதிகாரியின் எச்சரிக்கை, இந்த புதிய முயற்சியின் அவசியத்தையும், இந்தியாவின் பாதுகாப்பு அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றத்தையும் வெளிப்படுத்துகிறது.

## 2026 முதல் புதிய இருசக்கர வாகனங்களுக்கு 2 ஹெல்மெட்டுகள் கட்டாயம்

### மத்திய அரசின் புதிய உத்தரவு




சாலை பாதுகாப்பை வலுப்படுத்தும் முயற்சியாக, மத்திய அரசு புதிய இருசக்கர வாகனங்களுக்கு இரண்டு ஹெல்மெட்டுகள் வழங்குவது கட்டாயம் என அறிவித்துள்ளது. இது 2026 ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வரும்.

உலகளவில் அதிக அளவில் சாலை விபத்துகள் நடைபெறும் நாடுகளில் இந்தியா முக்கியமான இடம் பிடித்துள்ளது. இந்தியாவில் ஏற்படும் உயிரிழப்புகள் நிறைவாக இருசக்கர வாகன விபத்துகளால் தான் ஏற்படுகின்றன. இந்த விபத்துகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக, ஹெல்மெட் அணியாமல் பயணம் செய்வது குறிப்பிடப்படுகிறது.

ஏற்கனவே, இருசக்கர வாகன ஓட்டுநருடன் பின்னால் அமர்ந்து செல்லும் நபரும் ஹெல்மெட் அணிய வேண்டும் என சட்டம் இயல்பாக உள்ள நிலையில், தற்போது அதை மேலும் கடுமையாக பின்பற்றவைக்கும் விதமாக, புதிய வாகனங்களுக்கு இரண்டு ஹெல்மெட்டுகள் வழங்கப்பட வேண்டும் என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், புதிய பைக்குகளில் ஏபிஎஸ் எனப்படும் ஆன்டி-லாக் பிரேக்கிங் அமைப்பும் கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. இந்த புதிய விதிகள், விபத்துகளை குறைக்கும் நோக்கில் அமல்படுத்தப்படுவதாக அதிகாரிகள் கூறுகிறார்கள்.

## அரசகுலச் சான்றோர் ஏனாதி நாதர்

**தி கோவை ஹெரால்டு**



ஏனாதிநாதர், நாச்சியார்கோயில் அருகில் உள்ள எயினனூரில், சான்றார் குலம் என்று போற்றப்படும் ஈழக்குலத்தில் தோன்றினார். சிறந்த சிவபக்தராகத் திகழ்ந்தார். திருநீறு அணிந்த சிவனடியார்களைச் சிவனாகவே கருதி வணங்கி வாழ்ந்தார். அரச குலத்தார்க்கு வாள் வித்தையைப் பயிற்றுவித்து, அதன் மூலம் ஈட்டிய பொருளை சிவனடியார்களுக்கே அளித்து சிவத்தொண்டு புரிந்தார்.

அதிசூரன் என்னும் வாள் வித்தைப் பயிற்சியாளன் அதே எயினனூரில் வாழ்ந்து வந்தான். ஏனாதிநாதரின் புகழ் மீது அவன் பொறாமை கொண்டான். தன்னுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெறுபவருக்குத் தான் அனைவருக்கும் வாள் வித்தை கற்பிக்கும் உரிமை என்று கூறி அவன் ஏனாதியாரைப் போருக்கு அழைத்தான். கடும் போரில் அவன் தோற்றான். ஏனாதிநாதரை வஞ்சனையால் வெல்ல எண்ணி மீண்டும் போருக்கழைத்தான்.

ஏனாதிநாதரும் போருக்கு வந்தார். அதிசூரன், கேடயத்தால் திருநீறு பூசிய தன் நெற்றியை மறைத்துக் கொண்டு வந்து, போரிடும் போது கேடயத்தை விலக்கி, நீறணிந்த தன் நெற்றியை ஏனாதிநாதரிடம் காட்டினான். நெற்றியில் திருநீற்றினைக் கண்டதும் ஏனாதிநாத நாயனார், சிவனடியாரை எதிர்ப்பதோ, போரிடுவதோ முறையாகாது என்று கருதி, தன் வாளையும், கேடயத்தையும் உயர்த்திப் பிடித்து போரிடாமல் அமைதியாக நின்றார். அதிசூரன் தன் வாளால் ஏனாதிநாதரை வெட்டிக் கொன்றான்.

உடன் அவருக்கு அருள் செய்ய அங்கே தோன்றிய சிவபெருமான், ஏனாதிநாத நாயனாருக்கு என்றும் தம்மோடு பிரியாதிருக்கும் வரத்தைத் தந்தார். ஏனாதிநாத நாயனார், சிவலோகம் அடைந்து என்றும் சிவனைப் பிரியாது வாழும் பேறு பெற்றார்.

ஏனாதிநாத நாயனாரின் குருபூஜை, சிவாலயங்களில், ஒவ்வோராண்டும், புரட்டாசி மாத உத்திராட நட்சத்திரத்தில் நடைபெறுகிறது.

## டாக்டர் என் . ஜி. பி. கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புகுமுக வகுப்பு




**தி கோவை ஹெரால்டு**

டாக்டர் என்.ஜி. பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அறிவியல், மேலாண்மை, கணினி, வணிகம் சார்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்கான புதுமுக வகுப்பு என். ஜி . பி கலையரங்கில் நடைபெற்றது. டாக்டர் என் . ஜி. பி . கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சு. சரவணன் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு வரவேற்புரை வழங்கினார். டாக்டர் என் . ஜி. பி . கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலர் மருத்துவர் தவமணிதேவி பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார்.

டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி தலைமையுரை வழங்கினார். அவர் தமது உரையில், மாணவர்கள் பெரியவர்களுக்கு எப்பொழுதும் மரியாதை தர வேண்டும் என்றார். நல்ல பழக்க வழக்கங்கள் மட்டுமே வெற்றிக்கான திறவுகோலாக இருக்க முடியும் என்றார். டாக்டர் என் . ஜி. பி . கல்விக்குழுமங்களின் கல்விசார் இயக்குனர் முனைவர் பெ. ரா. முத்துசாமி வாழ்த்துரை வழங்கினார் . டாக்டர் என். ஜி.பி.ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் என் பழனிசாமி, டாக்டர் என் . ஜி. பி . கல்விக்குழுமங்களின் கல்வி இயக்குனர் மதுரா அருண் பழனிசாமி, ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். டாக்டர் என் . ஜி. பி . ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் முனைவர் ஒ .டி. புவனேஸ்வரன் கல்லூரியின் புல முதன்மையர்கள் மற்றும் துறைத் தலைவர்களை அறிமுகம் செய்து வைத்தார். கல்லூரியின் கல்விப் புலமுதன்மையர் முனைவர் கு.இராமமூர்த்தி நன்றியுரை வழங்கினார். நாட்டுப் பண்ணுடன் இவ்விழா இனிதே நிறைவு பெற்றது.

## உலகின் விலையுயர்ந்த புடவையின் கதை!



வெறும் கார், தங்கம், வைரங்கள் போன்ற ஆடம்பர பொருட்களே கோடிக்கணக்கில் விலையுடையவை என நம்மில் பலர் நினைப்போம். ஆனால் ஒரு புடவையும் இத்தகைய ஆடம்பர வரிசையில் இடம்பெறக்கூடும் என்கிற செய்தி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

'விவாஹா பட்டுசேலை' என அழைக்கப்படும் இந்த உலகின் மிக விலையுயர்ந்த புடவை, 2018ஆம் ஆண்டு ரூ. 39,31,627க்கு விற்கப்பட்டது. இந்த அதிநவீன புடவை சென்னையின் காஞ்சிபுரத்தில் தூய பட்டினால் நெய்யப்பட்டு, நம் பாரம்பரிய கைவினைத் திறனின் சிறப்பை வெளிக்காட்டுகிறது.

புடவையின் சிறப்பு என்னவெனில், இதில் தூய தங்கம், வெள்ளி, வைரம், மாணிக்கம், மரகதம் உள்ளிட்ட ஆடம்பர ரத்தினங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 59.7 கிராம் தங்கம், 3.913 காரட் வைரங்கள், 120 மில்லிகிராம் பிளாட்டினம், 5 கிராம் வெள்ளி, 2.985 காரட் மாணிக்கம், 55 சென்ட் மரகதம் உள்ளிட்ட பல்வேறு ரத்தினங்கள் சேர்த்து, இந்த புடவையின் மொத்த எடை சுமார் 8 கிலோகிராம் ஆகும்.

மேலும், இந்த புடவையின் பல்லு பகுதி, புகழ்பெற்ற ஓவியர் ராஜா ரவி வர்மா அவர்களின் 1889 ஆம் ஆண்டின் "இசைக்கலைஞர்களின் கேலக்ஸி" எனும் ஓவியத்தின் அழகிய காட்சியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதில் 11 இசைக்கலைஞர் பெண்கள் இசைக்கருவிகளை வாசிக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது.

16 வண்ணங்கள் மற்றும் 64 விதமான நூல்களால் நெய்யப்பட்ட இந்த புடவையை உருவாக்க 36 திறமையான நெசவாளர்கள் இணைந்து, மொத்தம் 4,760 மணிநேரங்கள் பணியாற்றினர். இதனை முழுமையாக தயார் செய்ய ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலான காலம் எடுத்ததாக கூறப்படுகிறது.

இந்த விலையுயர்ந்த சேலையை பெங்களூருவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர், தனது திருமணத்தன்று மனைவிக்கு பரிசாக வாங்கினார். பின்னர், 2009 ஆம் ஆண்டு, குவைத்தைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரும் இதேபோன்ற புடவையை வாங்கினார்.

பாரம்பரியம், கலை, கைவினைத் திறன் மற்றும் ஆடம்பரத்தின் அபூர்வச் சங்கமமாக விளங்கும் 'விவாஹா பட்டு சேலை', இந்திய கலைத்தொழிலுக்கு ஒரு பெருமையான அடையாளமாகவும், உலக அளவில் சிறப்பு பெற்ற நகைச்சுவையுடைய ஆடையாய் வலம் வருகிறது.

## இனி 15 நாட்களில் கிடைக்கும் வாக்காளர் அடையாள அட்டை




இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களுக்கான மிக முக்கியமான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. வாக்காளர் அடையாள அட்டையை (EPIC) விரைவாக பெறும் வகையில் புதிய கண்காணிப்பு அமைப்பு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய செயல்முறைமையின் மூலம், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்கப்படும் அல்லது ஏதேனும் திருத்தங்கள் செய்யப்படும் நபர்களுக்கு, 15 நாட்களுக்குள் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படும்.

இதன் மூலம், அதிக நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை தற்போது நீங்குகிறது.

தற்போது, புதிய கண்காணிப்பு அமைப்பின் கீழ், வாக்காளர் அடையாள அட்டை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டமும் துல்லியமாக கண்காணிக்கப்படும். அட்டை தயாரிக்கப்பட்ட பின்னர், அது அஞ்சல் துறையின் மூலம் நேரடியாக வாக்காளருக்கு அனுப்பப்படும்.

மேலும், இந்த புதிய முறையில், விண்ணப்பதாரர்களுக்கு தங்கள் மொபைல் எண்ணுக்கு குறுஞ்செய்தி வாயிலாக அனைத்துக் கட்டங்களின் நிலை தொடர்பான தகவல்கள் அனுப்பப்படும். இது முறையான தகவல் பகிர்வையும், நேர்த்தியான சேவையையும் உறுதி செய்யும்.

கடந்த நான்கு மாதங்களில், தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நலனுக்காக பல சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவை அனைத்தும் வாக்காளர் அனுபவத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

## ஒரே நேரத்தில் தந்தை-மகன் இருவரும் காவல்துறையில் சேர்ப்பு



உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஹாப்பூரைச் சேர்ந்த ஒரு தந்தை-மகன் ஜோடி, ஒரே நேரத்தில் காவல்துறையில் சேர்ந்துள்ளனர்.

மேற்குப் பகுதியில் உள்ள ஹாப்பூர் மாவட்டத்தின் உதய்பூர் நங்லா கிராமத்தைச் சேர்ந்தவர் யஷ்பால் பவுஜி (40). இவர் 18வது வயதில் இந்திய ராணுவத்தில் சேர்ந்ததுடன், 18 ஆண்டுகள் சேவையில் ஈடுபட்டு 2019-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

ஓய்வுக்குப் பிறகு காவல்துறையில் பணியாற்றும் ஆர்வம் அவரில் உருவானது. இதே நேரத்தில், அவரது மகன் சேகர் நாகரும் (19) காவல்துறையில் சேர விருப்பம் தெரிவித்தார். இருவரும் ஒரே இலக்கை நோக்கி பயணிக்க முடிவு செய்தனர். தந்தை-மகன் இருவரும் ஒன்றாக சேர்ந்து தொடர்ந்து உடற்பயிற்சிகள் மேற்கொண்டு, காவலர் தேர்வுக்கு தயாராகினர். கடைசியில் இருவரும் தேர்வை வெற்றிகரமாக முடித்து காவல்துறையில் சேரும் வாய்ப்பை பெற்றனர்.

இவர்கள் இருவரும் சமீபத்தில் லக்னோவில் நடைபெற்ற சிறப்பு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களிடமிருந்து சேர்க்கை ஆணைகளைப் பெற்றனர். இந்த அபூர்வ சாதனை குடும்பத்தினரிடையே மட்டுமின்றி, கிராம மக்கள் மத்திலும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சுந்தரம் வெல்த் சேவையை விரிவுபடுத்தும் சுந்தரம் ஃபைனான்ஸ் நிறுவனம்

சுந்தரம் வெல்த் என்ற பெயரிலான தனது சேவையை ஒரு பிரத்யேக சொத்து மேலாண்மைச் சேவையாக விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த முக்கிய நடவடிக்கை, இந்தியாவில் மிக உயர்ந்த நிகர மதிப்புள்ள தனிநபர்கள், உயர் நிகர மதிப்புள்ள தனிநபர்கள் மற்றும் வசதி படைத்த குடும்பங்களின் அதிநவீன நிதித் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் இடத்தில் இந்நிதி நிறுவனத்தை நிலைநிறுத்தும்.

SUNDARAM WEALTH

இது குறித்து சுந்தரம் ஃபைனான்ஸ்நிறுவனத்தின் செயலாக்க துணைத் தலைவர் ஹர்ஷா விஜி, சுந்தரம் ஃபைனான்ஸின் நிர்வாக இயக்குநர் ராஜீவ் லோச்சன் ஆகியோர் அறிவித்தனர்.

# ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் மெட்ரொபாலிஸ் சார்பில் அரசு பள்ளியில் புதிய கட்டிடம் திறப்பு




▸ அமுத செம்மல் 'என். கே. மகாதேவன்' என பெயரிடப்பட்ட நூற்றாண்டு பள்ளி கட்டிடத்தை அரசு பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் சந்திர மோகன் திறந்து வைத்தார். ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் எம்.கிருஷ்ணன் பள்ளியின் கட்டிட சாவியை பள்ளி தலைமையாசிரியர் வித்யா-விடம் வழங்கினார். மேலும் விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் முன்னிலை வகித்தார். உடன், ரோட்டரி மெட்ரொபாலிஸ் சங்கத்தின் தலைவர் வரதராஜன்.

தி கோவை ஹெரால்டு

கோவைகிணத்துக்கடவு அருகே உள்ள அரசம் பாளையம் அரசு உயர் நிலைப் பள்ளியில் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் மெட்ரொபாலிஸ்இணைந்து மாணவர்களின்வசதிக்காக ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நான்குவகுப்பறைகட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது.

என்.கே.மகாதேவ ஐயரின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, கடந்த 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்த வகுப்பறை கட்டிடம் கட்டு வதற்கானபூமிபூஜைமற்றும் அடிக்கல் நாட்டு விழா நடந்தது. அப்போதைய கோவைமாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பங்கேற்று அடிக்கல் நாட்டினார்.

தற்போது இந்த அரசு பள்ளியில்'அமுத செம்மல் என். கே. மகாதேவன்' என பெயரிடப்பட்ட நூற்றாண்டு கட்டிடம்கட்டிமுடிக்கப்பட்டு திறப்புவிழாநடைபெற்றது. இதில்சிறப்புவிருந்தினராக தமிழகஅரசுபள்ளிக்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் சந்திர மோகன் கலந்துகொண்டு திறந்து வைத்தார். மேலும் விழாவில்கோவைமாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி கிரியப்பனவர் முன்னிலை வகித்தார்.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் எம்.கிருஷ்ணன், ரோட்டரி மெட்ரொபாலிஸ் சங்கத்தின் தலைவர் வரதராஜன், சங்கத்தின் உறுப்பினர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள்,மாணவர்கள் எனபலர் இந்தநிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மேலும் இப்பள்ளியில் பொதுத் தேர்வுக்கு முன் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள்நடக்கும்போது, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. இந்த பள்ளியில்மாணவர்கள்100 சதவீதம்தேர்ச்சிபெற்றனர் என்று பள்ளியின்தலைமை ஆசிரியர் தெரிவித்தார்.

மேலும் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் எம். கிருஷ்ணன் பேசுகையில், "என்தந்தைபெயரில்இந்த பள்ளியில்கட்டிடம்உள்ளது என்பது பெருமையாக வுள்ளது. அரசுப்பள்ளியில் படிக்கும் மாணவர்களின் நலனுக்காக ரோட்டரி மெட்ரொபாலிஸ் சங்கம், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து இந்தக் கட்டிடம் கட்ட நிதியுதவி வழங்கி, சமுதாயத்தில் சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ளனர். புதிதாக அமைந்துள்ள வகுப்பறை கட்டிடத்தில் ஆய்வுக்கூடம், நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. வகுப்பறைகளுக்குள் மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

# கோட்டயத்தில் 'ட்ரக்ஸிட்' விழிப்புணர்வு மாநாடு

## மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்




தி கோவை ஹெரால்டு

கோட்டயத்தில் நடைபெற்ற 'ட்ரக்ஸிட்' விழிப்புணர்வுமாநாட்டைமகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்

கேரளமாநிலம்கோட்டயத்தில் மலங்கரா ஆர்தோடாக்ஸ் சிரியன் சபை அமைப்பில் நடைபெற்ற மத்தியிலான போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு மாநாடு 'ட்ரக்ஸிட்' நிகழ்வை, மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் பேசிய அவர், இளைய தலைமுறையினர்போதைப் பொருள் பழக்கத்தின் ஆபத்துகளைப் புரிந்து கொள்வது அவசியம் எனக் கூறினார்.போதைப்பொருள் அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்தை தேசிய இயக்கமாகக் கொண்டுசெல்லவேண்டும் என்றார்.

இந்த மாநாட்டில் கிழக்கின் கத்தோலிக்க பேராயர் பசிலியோஸ் மார்த்தோமா மாத்யூஸ் III தலைமை வகித்தார். நிகழ்வில் உரையாற்றிய அவர், கொட்டயத்துக்குஅருகேஉள்ள14ஏக்கர் நிலத்தில் ஹொலிஸ்டிக் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் வகையில் "வெல்னஸ்பார்க்" ஒன்றை அமைக்கும் திட்டத்தை அறிவித்தார். போதைப் பொருள்பழக்கத்திலிருந்து வெளியே வர முயற்சி செய்யும் அனைவருக்கும் ஆதரவுவழங்கசபைதயார் நிலையில் இருப்பதையும் உறுதி செய்தார்.

இந்நிகழ்வுக்கு பல மத மற்றும் அரசியல் தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர். அவர்களில், நிலக்கல் மறைமாவட்டத்தின் சப்பிரகன்மெட்ரோபாலிடன் ஜோசப் மார்பார்னபாஸ், பாலா மறைமாவட்டத்தின் முன்னாள் துணை ஆயர் மார்ஜேக்கப் முரிக்கன், சி.எஸ்.ஐ மத்திய கேரள மறைமாவட்ட ஆயர் மலயில் சாபு கோஷி சேரியன், தாழத்தங்காடி ஜுமா மசூதியின் தலைமை இமாம் ஷஃபீக் மன்னானி, சட்டமன்ற உறுப்பினர் திருவஞ்சூர் ராதாகிருஷ்ணன்ஆகியோர் அடங்குவர்.

ஆர்தோடாக்ஸ் சபையின் மனித ஆற்றல் மேம்பாட்டு பிரிவின் தலைவர் மெட்ரோபாலிடன் கீவர்கீஸ் மார்கூரிலோஸ் வரவேற்புரைநிகழ்த்தினார்.

மாநாட்டின் முதல் அமர்வை திரைப்பட இயக்குநர் பிளெஸ்ஸி திறந்துவைத்தார்.விசிஞ்ஞும் சர்வதேச துறைமுகத்தின் மேலாண்மைஇயக்குநரான டாக்டர் திவ்யா எஸ். ஐயர் முக்கிய உரை நிகழ்த்தினார்.

இந்த மாநாட்டில், மத ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியை, மாணவர்கள்,பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தோர் பங்கேற்றனர்.

நிகழ்வின் முக்கிய நோக்கம், போதைப் பொருள்பழக்கத்திலிருந்து சமுதாயத்தை காக்கும் முனைப்புடன்பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

# ஆயிரம் பிறை கண்ட பார்க் கல்லூரி குழுமத் தலைவர் ரவி அகவை விழா

தி கோவை ஹெரால்டு





▸ பார்க் கல்வி குழுமத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் டாக்டர் பி.வி.ரவி அவர்களை வாழ்த்திய முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை. உடன், பார்க் கல்வி குழுமங்களின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். அனுஷா ரவி.

கோவை கணியூரில் அமைந்துள்ள கடந்த 50 க்கும் மேற்பட்ட வருடங்களாககல்விசேவை புரிந்து வரும் பார்க் கல்வி குழுமத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் டாக்டர் பி வி ரவியின்ஆயிரம் பிறைகண்ட அகவைவிழா பிரேமா ரவி அரங்கத்தில் நடைபெற்றது.

பேரூராதீனம் சாந்தலிங்கமருதாசல அடிகளார் மற்றும் சைவத்திரு குமரலிங்கம் ஆகியோர் தலைமையில் இந்த பூஜை நடைபெற்றது. இதனை தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், கல்லூரி தலைவர்கள், ரோட்டரி சங்கத்தினர், முன்னாள் மாணவர்கள் பார்க் கல்வி குழுமத்தினர் வாழ்த்தி ஆசி பெற்று சென்றனர்.

இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி, பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதிசீனிவாசன், தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, நல்லறம் அறக்கட்டளை தலைவர் எஸ் பி அன்பரசன், சூலூர் சட்டமன்றஉறுப்பினர் கந்தசாமி, முன்னாள் அமைச்சர் செ.மா.வேலுச்சாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், கருமத்தம்பட்டி பேரூராட்சி தலைவர் நித்யா மனோகரன், பாஜக மாநில விவசாய அணி தலைவர் ஜி.கே.நாகராஜ், சொல்லேர் உழவர் செல்லமுத்து, சக்தி குழுமங்களின் தலைவர் மாணிக்கம், குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் இணைத் தாளாளர் சங்கர் வானவராயர், ரத்தினம் கல்வி குழுமங்களின் தலைவர் மதன், ஈசா பொறியியல்மற்றும்தொழில்நுட்ப கல்லூரி நிர்வாகத்தினர் அஜித், ஆதர்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பார்க் கல்வி குழுமங்களின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். அனுஷா ரவி அனைவரையும் வரவேற்றார்.

# கோவை புரோசோன் மாலில் 'கதை கார்னிவல்' விழா புத்தகக் கண்காட்சி தொடக்கம்

தி கோவை ஹெரால்டு

கோவை புரோசோன் மாலில், விலை அல்ல, எடையால் புத்தகங்கள் விற்கப்படும் சிறப்பு புத்தகக் கண்காட்சி 'கதை கார்னிவல்' ஜூன் 20 முதல் ஜூலை 6 வரை நடைபெறுகிறது.

ஒருகிலோ புத்தகம் ரூ.549 என்ற விலை திட்டத்தில், வாசகர்கள் தங்கள் விருப்பமான புத்தகங்களை எடை போட்டு வாங்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

புத்தக விற்பனையைத் தவிர, இவ்விழாவில் வாரந்தோறும் நேரடி கதை சொல்லல், படைப்புப் பட்டறைகள், குழந்தைகள் விரும்பும் கதாபாத்திரங்களுடன் சந்திப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

குழந்தைகள், பெற்றோர் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும், கதைகள் மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் இவ் விழா வடிவமைக்கப்பட்டுள்ளது.

"கதைகள் வாசிக்கப்படுவதோடு அல்லாமல், உணரப்பட வேண்டியவை, வாழப்பட வேண்டியவை," என விழா ஏற்பாட்டாளர்கள் பெருமிதத்துடன் தெரிவிக்கின்றனர்.

இந்தத் புத்தகத் திருவிழா குடும்பங்களுக்கும் புத்தக ரசிகர்களுக்கும் நிச்சயமாக சுவாரசியமான அனுபவமாக அமையும்.

இலவச நுழைவு கொண்ட இவ்விழா, குடும்பங்களுக்கும், இளம் வாசகர்களுக்கும் தவறாமல் காண வேண்டிய ஒரு மகிழ்ச்சி மிக்க இலக்கிய திருவிழா என்பதில் சந்தேகமே இல்லை. இந்த புத்தக கண்காட்சி மெயின் ஏட்ரியம் புரோசோன் மாலில் நடைபெறவுள்ளது. தகவல் தொடர்புக்கு: எஸ்.பிரிங்ஸ்டன் நாதன் 87782 10040.






# மார்ட்டின் அறக்கட்டளை சார்பில் கௌசிகா நதியை சீரமைக்க 50 லட்சம் நிதி




▸ கௌசிகா நதியை சீரமைக்க மார்ட்டின் அறக்கட்டளை 50 லட்சம் நிதி உதவி கோவை ரேஸ்கோர்ஸ் ரோட்டரி மாவட்ட 3201 அலுவலகத்தில் ரோட்டரி கிளப் 3201 மேம்பாட்டு குழுவும் உறுப்பினர் குழு தலைவர் லீமா ரோஸ் மார்ட்டின் ரோட்டரி மாவட்டம் 3201 கவர்னர் சுந்தர வடிவேலிடம் வழங்கினார். உடன் கோவை ஆழம் ரோட்டரி கிளப் தலைவர் டெய்சி மாட்டின், கௌசிகா நீர் கரங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் ரோட்டரி கிளப் உறுப்பினர் சூரியகுமார், ரோட்டரி மாவட்ட உதவி கவர்னர் கவிதா கோபாலகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

## ராயல் கேர் மருத்துவமனையில் நடைபெற்ற யோகா தினம்



▶ ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் கே.மாதேஸ்வரன் யோகா திட்டத்தை துவக்கி வைத்து யோகாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பேசினார்.

## கோவை அம்ருதா விஸ்வ வித்யா பீடத்தில் நடைபெற்ற யோகா பயிற்சி



▶ சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, கோவை அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தில் யோகா பயிற்சி அமர்வு நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட மாணவிகள்.

### சர்வதேச யோகா தினம்

# மனம் அமைதிபெற யோக பயிற்சி அவசியம் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேச்சு



**தி கோவை ஹெரால்டு**

கோவை மதுக்கரை பிருந்தாவன் வித்யாலயா பந்நாட்டு பள்ளியில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி வேலுமணி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுடன் யோகாசனம் செய்தார்.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கோவை மதுக்கரை பகுதியில் உள்ள தனியார் பள்ளியில்400க்கும்மேற்பட்ட மாணவ மாணவிகள் இணைந்து யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

இதில் முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி, பள்ளி தாளாளர் கே.வசந்தராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். எஸ்.பி.வேலுமணி பள்ளி மாணவ மாணவிகளுடன் சேர்ந்து யோகாசனம் செய்தார்.

பின்னர் செய்தியாளர் களிடம் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறும்போது: உலகம் முழுவதும் 190 நாடுகளில் சர்வதேச யோகா தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்தியாவில்பிரதமர்மோடி துவங்கியோகாபயிற்சிகளை மேற்கொண்டார். அதேபோல்தமிழ்நாட்டிலும் யோகா தினம் கடைப்பிடிக்கப்படுகிறது, இதனைஎங்கள்பொதுச்செயலாளர் வலியுறுத்துவார். காரணம்மனதளவுஅமைதியாகஇருக்கும்,நோய்தொற்றில் இருந்து விடுபடலாம்.

போதைகலாச்சாரத்தில் இருந்து விடுபட யோகா பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் அனைத்து வயதினரும் யோகாபயிற்சிமேற்கொள்ள வேண்டும். போதை கலாச்சாரத்தில் இருந்து இளைஞர்கள் விடுபட வேண்டும் என எங்களது பொதுச்செயலாளர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

அதிமுக ஆட்சியில் 2021 வரை போதை பொருட்கள் புழக்கம் ஆகியவை கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அன்று காவல் துறை கடுமையான நடவடிக்கையில் எடுத்தது. ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக போதை கலாச்சாரம் அதிகரித்துள்ளது. இளைஞர்கள் அதனால் குற்ற சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். 2026-ல் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வரும்போது இந்த போதை கலாச்சாரம் முழுமையாகதடுக்கப்படும் என தெரிவித்தார்.




## யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வுக்கு தேர்ச்சி பெற்ற தமிழ்நாடு மாணவர்களுக்கு ரூ.25,000 ஊக்கத்தொகை

2025ஆம் ஆண்டின் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (UPSC) முதல் நிலைத் தேர்வில் (நடந்தது 25.05.2025) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு, முதன்மைத் தேர்வுக்கான தயாரிப்புக்காக ரூ.25,000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த ஊக்கத்தொகை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்தின்கீழ்இயங்கும்நான்முதல்வன்திட்டத்தின் போட்டித் தேர்வுப் பிரிவு வழியாக, மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

இது தொடர்பான செய்திக்குறிப்பில், 202324 ஆண்டுக்கான பட்ஜெட் உரையின் அடிப்படையில் தமிழக அரசு மற்றும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வு மையம் (AICSCC) இணைந்து செயல்படுத்தும் இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 மாணவர்கள் மதிப்பீட்டுத் தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். அவர்கள் UPSC முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராகும் காலத்தில், 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். இதனுடன், முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு கூடு தலாக ரூ.25,000 ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இந்த திட்டம் கடந்த 2023ஆம் ஆண்டு ரூ.10 கோடி நிதியுடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாணவர்கள் UPSC உள்ளிட்ட மத்திய, மாநில, தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளை இலவசமாக தயாராகி வருகின்றனர். இலவச பயிற்சி மற்றும் தங்கும் வசதியுடன் இந்ததிட்டம்மாணவர்களிடம்பரவலாகவரவேற்கப்படுகிறது. சமீபத்தில் வெளியான 2025 UPSC முதல்நிலைத் தேர்வின் முடிவுகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களின் வெற்றி விகிதம் அதிகரித்துள்ள நிலையில், இந்த ஊக்கத் தொகை அறிவிப்பு மாணவர்களுக்கு பெரிய உற்சாகத்தை ஏற்படுத்தி யுள்ளது. இந்த நலத்திட்டத்திற் காக, UPSC முதல்நிலைத் தேர்வில் 2025ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்கள்,ஜூன்21முதல்ஜூலை2,2025வரையிலானகாலக் கட்டத்தில் https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_registration/ என்ற இணையதளத்தின் மூலம் அறிவிக் கையைப் படித்து, இணையவழியில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த ஊக்கத்தொகை, மாணவர்களின் சர்வீஸ் கனவுகளை நனவாக்கும் பாதையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் புதிய முன்னெடுப்பாகவும், தமிழ்நாடு அரசு கல்வி நல திட்டங்களில் மிக முக்கியமான அடையாள மாகவும் காணப்படுகிறது.

# கோவை மெட்ரோ ரயில் திட்டம் பூமிக்கடியில் உள்ள ஒயர்கள் 80 சதம் அகற்றம்

**தி கோவை ஹெரால்டு**

■ ஆ.வெ.மாணிக்கவாசகம்

கால் நூற்றாண்டு காலமாக கோவை மக்கள் காத்திருந்த கோவை மெட்ரோ ரயில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

அனைவருக்கும் போக்குவரத்துபயணம்மிக,மிக அவசியமான ஒன்று.அதிலும் வேகமான இன்றைய கால கட்டத்தில் மிக, மிக விரைவாக ஒருஇடத்திற்குவேண்டும்எனும் வேட்கை அனைவரிடத்திலும் இயற்கையாகவே உள்ளது.

பொதுமக்களின்தேவைக்காகவும்,வேகமாக, விரைவாக ஒரு இடத்திற்கு செல்ல மெட்ரோ ரயில் சேவை இன்று தனி இடம் பிடித்து, மக்களுக்கு சுகமான,இதமான பயணமாக அமைகிறது என்றால் அது மிகையில்லை. மெட்ரோ ரயில் என்றால் விரைவான ரயில் சேவை நிறுவனம் என்பதாகும்.

உலகின் முதல் மெட்ரோ ரயில் போக்குவரத்து லண்டன் மாநகரில் 1863-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. நீராவி என்ஜின் கொண்டு இயக்கப்பட்ட முதல் ரயில் சேவை இதுவே. பின்பு 27 ஆண்டுகள் கழித்து 1890-ல் இதே ரயில் பாதையில் ஆழமான குழாய் பாதை அமைத்து, மின்சார ரயில்கள் இயங்க தொடங்கின. இதுவே உலகின் முதல் மின்சார மெட்ரோ அமைப்பு ஆகும்.

402 கிலோமீட்டர் நீளம் கொண்ட இந்த லண்டன் நிலத்தடி மெட்ரோ ரயில், 270 நிலையங்களை தன்னகத்தே கொண்டு இருந்தது. உலகிலேயே இரண்டாவது மிக நீளமான மெட்ரோ அமைப்பாகும் இது. மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் 1984-ல் இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது.

இந்த ரயில் சேவை படிப்படியாக இந்தியாவின் பெற நகரங்களில் விரிவுபடுத்தப்பட்டன. டெல்லி மெட்ரோ, இந்தியாவின் மிகப்பெரிய மெட்ரோ அமைப்பாகும். பல பகுதி நகரங்களை இணைக்கும் பாலமாக டெல்லி மெட்ரோ தன்னகத்தை கொண்டுள்ளது. சென்னை மெட்ரோ, இரு வகையான சேவைகளை வழங்கிவருகிறது. இந்தியாவின் இரண்டாவது நீளமான மெட்ரோ நெட்வொர்க் பெங்களூரு மெட்ரோ ஆகும்.

இந்தியாவில் கொல்கத்தா, டெல்லி,சென்னை,பெங்களூரு, ஐதராபாத், ஜெய்ப்பூர், குர்கான், மும்பை, நொய்டா கொச்சின், லக்னோ, அகமதாபாத் மற்றும் நாக்பூர் ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை உள்ளது. இந்தூர், பாட்னா, ஆக்ரா, சூரத், மற்றும் கோவை நகரங்களில் மெட்ரோ ரயில் பணிகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன.

கடந்த 2011-ம் ஆண்டு மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது, மெட்ரோ ரயில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தகுதியான நகரங்களாக இந்தியாவின் 19, 2-ம் நிலை நகரங்களாக மத்திய நகர்ப்புற மேம்பாட்டு துறை அமைச்சகம் தேர்வு செய்தது. அதில் தமிழகத்தில் இடம் பெற்றிருந்த ஒரே நகரம் கோவை மாநகரம் மட்டுமே. கொச்சி, புனே ஆகிய நகரங்கள் அந்த பட்டியலில் இருந்தது .அங்கு தேர்வு செய்யப்பட்ட ஆண்டு முதல் மெட்ரோ ரயில் பணிகள் தொடங்கப்பட்டது. ஆனால் கோவையில் மட்டும் அப்பணிகள், அறிவிப்பாக மட்டுமே இருந்தது.

கோவை மெட்ரோ ரயில் அமைப்பை உடனடியாக ஏற்படுத்தி, மெட்ரோ சேவை பணிகளை தொடங்க வேண்டும் என அரசியல் கட்சிகள், கோவையில் உள்ள அனைத்து தொழில் அமைப்புகள், பொதுநல அமைப்புகள், நுகர்வோர் மன்றம் உள்ளிட்டவைகள் மத்திய மாநில அரசுக்கு தொடர் கோரிக்கையினை வைத்த வண்ணம் இருந்தனர். அதன் பலனாக 2017 ஆம் ஆண்டு கோவை மெட்ரோ ரயில் திட்டம் வெளியானது.

கோவை மாநகர பகுதியில் 34.8 கிலோ மீட்டர் தொலைவில் இரண்டு வழித்தடங்களில், 32 ரயில் நிலையங்களுடன் மெட்ரோ ரயில் திட்டம் உருவாக்க பட்டது.

100 முதல் 150 ஆண்டு களுக்கான போக்குவரத்து கட்டமைப்பு வசதிகள் கொண்ட இந்த கோவை மெட்ரோ ரயில், வழித்தடத்தில் 10ஹெக்டேரிலும், பணிமனைக்காக நீலம்பூரில் 16 ஹெக்டரிலும் நிலம் கையகப் படுத்தப்பட உள்ளது. ரூ.10 ஆயிரத்து 740 கோடி மதிப்புட்டில் உருவாக்கப்பட்டுள்ள இப்பெரும் திட்டம், மூன்று ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவிநாசி சாலை வழித்தடம், உக்கடம் பேருந்து நிலையம் முதல் கோவை விமான நிலையம் வழியே நீலம்பூர் வரை 20.4 கிலோ மீட்டர் தூரம்.

மேலும் சக்தி வழித்தடம் கோவை ரயில் நிலையம் துவங்கி வலியம்பாளையம் பிரிவு வரை 14.4 கிலோ மீட்டர் என கோவை மெட்ரோ இன்னும் சில ஆண்டுகளில் வலம் வர உள்ளது. மூன்று பெட்டிகள் இணைக்கப்பட உள்ள இந்த கோவை மெட்ரோ ரயிலில் 750 -க்கும் மேற்பட்டோர் பயணிக்கலாம்.

இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துதல், மழைநீர் வடிகால் மாற்றி அமைத்தல் ஆகிய ஆயத்தப் பணிகள் கடந்த ஆண்டு டிசம்பர் -24 தேதி தொடங்கப்பட்டது .

அவிநாசி சாலை வழித்தடம், சத்தியமங்கலம் சாலை வழித்தடம் ஆகிய இரு பகுதிக்கு உட்பட்ட பூமிக்குள் எந்தெந்த பகுதியில் மின் ஒயர்கள், தொலைத்தொடர்பு ஒயர்கள், பாதாள சாக்கடை அமைப்புகள், கேஸ் குழாய்கள் உள்ளடவைகள் குறித்து தொடர்புடைய நிறுவனங்கள் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு அந்தந்த பணியாளர்களை வைத்து, அவர்கள் தேவை சார்ந்த வயர்கள் உள்ளிட்டவைகளை இனம் காணப்பட்டு, அவர்களின் முழு ஒத்துழைப்புடன் கடந்த சில மாதங்களுக்கு முன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஆய்வுகளின் அடிப்படையில் அந்தந்த இடங்களில் உள்ள தளவாடப் பொருட்களை அகற்றும் பணிகள் தற்போது 85 சதவீதம் இரு வழித்தடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்னும் மீதி இருக்கும் பணிகளை, விரைந்து முடித்து தர சென்னை மெட்ரோ நிர்வாகம், கோவை மாநகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மெட்ரோ வழித்தடத்திற்கு தேவைப்படும் நிலங்கள் குறியீடு செய்யும் பணி நடைபெற உள்ளது. இதன் முதல் கட்டமாக சக்தி ரோடு மெட்ரோ ரயில் வழித்தடத்தில் உள்ள, கணபதி டெக்ஸ்டூல் பாலம் அருகே நிலத்தினை எடுக்கும் பணிகள் தொடங்கும் என சென்னை மெட்ரோ நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழித்தடங்களில் உள்ள நில உரிமையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால், நிலத்தின் மதிப்பை விட, இரு மடங்கு நிதி, அரசு தரப்பில் வழங்கப்படும் என்பதுதான். ஆகவே எதிர்கால தேவையினை கருதி, வழித்தடங்களில் உள்ள நில உரிமையாளர்கள், தாராளமாக தங்களின் நிலங்களை மெட்ரோ நிர்வாகத்திற்கு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.

2028-ம் ஆண்டு கோவை மக்கள், மெட்ரோ ரயிலில் மட்டற்ற மகிழ்ச்சியாய் பயணிக்கலாம்.



## அனைத்து வகை போன்களுக்கும் ஒரே போர்டபிள் சார்ஜர்



இதுவரை வந்திருக்கும் எத்தனையோ சார்ஜர்களை விட இந்த போர்டபிள் சார்ஜர் பலருக்கும் மிகவும் பிடித்தமானதாக மாறிவிட்டது. காரணம்.. பத்து பொருத்தமும் பக்காவாக இருப்பதுதான். சார்ஜர் சந்தையில் இந்த போர்டபிள் சார்ஜர் நிச்சயம் ஒரு புதிய வரவாக அமைந்திருக்கும். ஸ்நேப்-என்-சார்ஜர் மட்டும் உங்கள் கையில் இருந்தால் போதும். வேறெதுவும் தேவையில்லை என்று சொல்லுமளவுக்கு வசதியாக இருக்கிறது. சந்தைக்கு வந்து விற்பனையில் சாதனை படைத்து வரும் இது, பவர் பேங்குகளை எல்லாம் ஓரங்கட்டிவிடும். இந்த ஸ்நேப்-என்-சார்ஜரை செல்போனில் அப்படியே இணைத்துவிடலாம். பிறகென்ன சார்ஜ் போட்டுக்கொண்டே பயன்படுத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை. சார்ஜர் போட்டிருக்கும்போது போனில் பேச முடியாது, அதன் ஒயர் பிரச்னையாக இருக்கும். இனி அந்தப் பிரச்னை இருக்காது. சார்ஜர் மின்னல் வேகத்தில் உங்கள் செல்போனை சார்ஜ் செய்துவிடும். ஸ்நேப்-என்-சார்ஜரை முழுமையாக சார்ஜ் செய்துகொண்டீர்கள் என்றால், செல்போன், ஸ்பீக்கர் என எல்லாவற்றையும் சார்ஜ் செய்துகொள்ளலாம். வழக்கமான சார்ஜர்களை போல மிகவும் சிறியதாக இருப்பதால், அதனை எப்போதும் உங்களுடன் எளிதாகவே வைத்துக் கொள்ளலாம். பவர் பேங்க் போல கனக்காது. ஒயரைத் தேடி அலைய வேண்டாம். ஒரு சில நிமிடங்களிலேயே சார்ஜ் ஏறிவிடும் என்பதாலும், செல்போனுக்கும் சார்ஜ் ஏற்றிவிடும் என்பதாலும்.. இது மிகவும் உதவுகிறது.

ஒவ்வொரு செல்போனுக்கும் ஏற்ற சார்ஜ் ஒயர்களை வைத்திருக்க வேண்டியதும் இல்லை. எந்த செல்போனாக இருந்தாலும் சார்ஜ் போட்டுக் கொள்ளும் வசதி உள்ளது. உங்கள் செல்போன் சி டைப் சார்ஜரா, இல்லை மைக்ரோ யுஎஸ்பி சார்ஜரா அல்லது ஆப்பிள் ஃபோனா.. இதில் எளிதாக இணைத்துக் கொள்ளலாம். போனுடன் மிகவும் எளிதாக அட்டாச் ஆகிறது. 2 ஆண்டுகளுக்கு வாரண்டியுடன் கிடைக்கிறது. எவ்வளவு சார்ஜ் இருக்கிறது என்பதை மிக அழகாக எல்இடி டிஸ்ப்ளே மூலம் தெரியுபடி உள்ளது. சார்ஜ் இல்லை என்று இந்த போர்டபிள் சார்ஜர் கைவிடாது என்கிறார்கள் பயன்படுத்தியவர்கள்.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.